MARTHANDAM DIOCESAN BULLETIN
For Private Circulation Only



Printed Matter

*"Once in our world,
a stable had something
in it that was bigger than
our whole world."
- C.S. Lewis*

To

BOOK POST

If Undeliveried please return to ...

**Bishop's House, Diocese of Marthandam, Marthandam P.O., K.K Dt.- 629 165**

Santhom Press, Diocese of Marthandam Mob : +91 94-42-469852

# Bulletin

## Diocese of Marthandam

## மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்



# கிறிஸ்து பிறப்பு (யல்தா) திருநாள் நல்வாழ்த்துக்கள்

மலர் 21 டிசம்பர் 2024 இதழ் 12

## Bishop's Diary

| Date | Day | Time | Programme | Place |
|---|---|---|---|---|
| 08.12.2024 | Sunday | 8.00 am | Feast Mass<br>Feast Mass | Poovankavu<br>Garaganam |
| 14.12.2024 | Saturday | 10.00 am<br>3.00 pm<br><br>6.00 pm | Christmas Celebration UCC<br>Christmas Celebration MPD Nidhi Ltd.<br>Christmas Celebration UCC | Nagercoil<br>Bishop's Home<br><br>Neyyoor |
| 15.12.2024 | Sunday | 3.30 am | Christmas Celebration Kollemcode District MCA | Punnamoottukadai |
| 16.12.2024 | Monday | 9.30 am | Monthly Recollection and Christmas Celebration for the priests | Bishop's House |
| 17.12.2024 | Tuesday | 11.00 am | Christmas Celebration-MIDS | Kazhuvanthittai |
| 20.12.2024 | Friday | 2.00 pm | Christmas Celebration UCCC | Marthandam |
| 21.12.2024 | Saturday | 2.30 pm | School Day - Mar Ivanios School | Kuzhithurai |
| 22.12.2024 | Sunday | | Christmas Celebration-MCMF | Kuzhithurai |
| 24.12.2024 | Tuesday | | Christmas Mass | Cherupalloor |
| 27.12.2024 | Friday | 10.00 am | Marriage | Adichavilagam |
| 28.12.2024 | Saturday | | Jubilee Celebration - Vincent de paul | Kuzhithurai |
| 29.12.2024 | Sunday | 8.00 am<br>3.00 pm | Feast Mass<br>Church Blessing | Kannacode<br>Koikathoppu |



# மார்த்தாண்டம் மறைமாவட்ட மலர்
# Marthandam Diocesan Bulletin

மலர். 21 டிசம்பர் 2024 இதழ். 12

**Patron**
*His Excellency*
*Most Rev. Vincent Mar Paulos*

**Editor**
*Rev. Fr. Franklin Jose*
*The Chancellor*

**Cover Design**
*Mrs. Uni Kumari B.*

**Printing**
*Santhom Press,*
*Marthandam*

**Published By**
*The Chancellor*
*Diocese of Marthandam*



மலர். 21 நவம்பர் 2024 இதழ். 11

Address :
Bishop's House,
Diocese of Marthandam,
Marthandam P.O.,
K.K Dist. - 629 165
E-mail : mardiobulletin@gmail.com



# The Malankara Syrian Catholic Church
# Bulletin of the
# Diocese of Marthandam



மலர். 21 டிசம்பர் 2024 இதழ். 12

## முக்கியமான நாட்கள்

டிசம்பர் 2024

| | |
|---|---|
| 01 | உலக எய்ட்ஸ் தினம் |
| 02 | உலக கணினி எழுத்தறிவு தினம் |
| 03 | சர்வதேச மாற்றுத்திறனாளிகள் தினம்<br>உலக பாதுகாப்பு தினம் |
| 04 | வனவிலங்கு பாதுகாப்பு தினம்<br>கடற்படை தினம் |
| 05 | சர்வதேச தன்னார்வ தினம்<br>உலக மண் தினம் |
| 07 | சர்வதேச சிவில் விமான போக்குவரத்து தினம் |
| 09 | சர்வதேச ஊழல் எதிர்ப்பு தினம் |
| 10 | மனித உரிமைகள் தினம், நோபல் பரிசு தினம்<br>சர்வதேச விலங்கு உரிமைகள் தினம் |
| 11 | சர்வதேச மலை தினம் |
| 12 | சர்வதேச நடுநிலைமை தினம் |
| 14 | சர்வதேச ஆற்றல் தினம் |
| 18 | சர்வதேச புலம்பெயர்ந்தோர் தினம் |
| 20 | சர்வதேச மனித ஒற்றுமை தினம் |
| 23 | தேசிய விவசாயிகள் தினம் |
| 24 | தேசிய நுகர்வோர் தினம் |
| 25 | கிறிஸ்துமஸ் |
| 26 | குத்துச்சண்டை நாள் |
| 29 | சர்வதேச பல்லுயிர் தினம் |

## உள்ளடக்கம்


1. Circulars 3-7
2. இளங்குருமடச் செய்திகள் 8
3. நற்செய்தி சங்க செய்திகள் 8
4. SISTERS OF CHARITY OF ST. JEANNE ANTIDE THOURET 9
5. MIDS 10
6. MCYM 15
7. மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்கம் (MCCL) 19
10. பெயர்விழா நல்வாழ்த்துக்கள் 20
11. MCA 21
12. திருமண ஆயத்தப்பயிற்சி 21
13. Health for One Million (HOM) 22
14. HOM - Special School for the Mentally Retarded 24
15. மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி 26
16. மறைவட்ட செய்திகள் 28
17. ஆயரின் நவம்பர் மாத நிகழ்வுகள் 32
17. இம்மாதம் நினைவு கூர 35
19. Bishop's Diary 36



*Printed by*
**Santhom Press, Diocese of Marthandam. Mob : +91 94-42-469852**




இறையருளினாலும் திரு ஆட்சிபீடத்தின் அனுகூலத்தாலும்
மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் ஆயர் பேரருட்
பெருந்தகை **வின்சென்ட் மார் பவுலோஸ்**
ஆண்டகையிடமிருந்து தம் ஆளுகைக்
குட்பட்ட அனைத்து குருக்களுக்கும்
துறவிகளுக்கும் இறைமக்கள்
அனைவருக்கும்
ஆசீர்.

Pro. No. EPL 2/2024 25.11.2024

## மேய்ப்பு மடல்

***கிறிஸ்துவில் அன்புநிறை அருட்தந்தையர்களே/இருபால் துறவிகளே/ இறைமக்களே,***

**“.....யாக்கோபிலிருந்து விண்மீன் ஒன்று உதிக்கும்! இஸ்ரயேலிலிருந்து செங்கோல் ஒன்று எழும்பும்!.....” (எண் 24:17)**

இறைவார்த்தை ஆண்டில் மனுவுருவான வார்த்தையை வரவேற்க நாம் ஆயத்தம் செய்து கொண்டிருக்கிறோம். “வாக்கு மனுவுருவானார் நம்மிடையே குடிகொண்டார்”; இம்மாபெரும் நிகழ்வே கடவுளின் மனிதராதல். மலங்கரை கத்தோலிக்க திருச்சபையில் யல்தா என்று அழைக்கும் இத்திருவிழாவை கொண்டாட பல்வேறு வகைகளில் நாம் ஆயத்தம் செய்து வருகிறோம். இயேசுவின் மீட்பு பணிக்கு முன்னோடியாக வந்த திருமுழுக்கு யோவானின் பிறப்பு பற்றிய அறிவிப்பு மற்றும் அதிசய குழந்தையாக பிறந்த இயேசுவின் பிறப்பு பற்றிய அறிவிப்பையும் இந்நாட்களில் தியானிக்கின்றோம். இந்த அறிவிப்பு காலத்தில் யல்தா

திருவிழாவுக்கான ஆயத்தங்களில் அனைவரும் ஆர்வமுடன் செயல்பட அறிவுறுத்துகிறேன். இயேசுவின் பிறப்பையும் குழந்தை பருவ நிகழ்வுகளையும் அவை சுமந்து வரும் மீட்பின் செய்தியையும் தியான பொருளாக்குவோம்.

25 நாட்கள் நோன்பிருந்து இந்த விழாவுக்கு ஆயத்தமாவது நமது மரபு. மூன்று வகையான நோன்புகளை கடைபிடிக்க வேண்டும்; உணவு நோன்பு, சொல் நோன்பு, ஊடக நோன்பு. ஒவ்வாத உணவுகளை உண்டு நோய்களுக்கு அடிமைகளாகி அதிதுயரத்தில் வாழும் சமூகம் இது. இந்த சமூகத்திற்கு உணவு நோன்பு ஒரு அவசர தேவை. மிக சிறந்த சுத்தம் வாக்கு சுத்தம். கடவுளின் வாக்கு படைபாற்றல் மிக்கது. மனிதனின் வார்த்தைகளுக்கும் விலைமதிப்பு உண்டு. ஒருவரின் உள்ள கிடக்கை, சிந்தனை, மனநிலை போன்றவை வார்த்தையில் வெளிப்படும். வாழ்வளிக்கும் வார்த்தைகளை பேசுவோம். ஊடகங்கள் ஆட்சி செய்யும் இந்த சமூகத்தில் ஊடக நோன்பும் ஒரு அவசர தேவையே. ஊடகங்கள் எத்தனையோ நன்மைகள் தந்தாலும் அவைகள் தரும் தீமை மிகுந்தே காணப்படுகிறது. இன்றைய இளைஞர்கள் இணையதளத்தில் மூழ்கி சமூக வலைதளத்தில் சிக்கி அலைபேசியுடன் அலைந்து திரிகின்றனர். இவற்றை பயன்படுத்தாமல் வாழ முடியாது என்ற நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அறநெறிக்கும் ஒழுக்கத்துக்கும் மாறான செய்திகளையும் உணர்சிகளை தூண்டும் காட்சிகளையும் தந்து நம் மனதையும், மனச்சான்றினையும் மாசுபடுத்திவிட்டனர். தவறுகளை ஞாயப்படுத்துகின்ற கலாச்சாரம் வளர்கின்றது, குடும்ப உறவுகள் சிதைகின்றன. இறைவேண்டல் செய்வதற்கு ஊடகங்கள் துணையாகவும், தடையாகவும் இருக்கின்றன. இறைவார்த்தை இதை குறித்து எச்சரிக்கை விடுக்கின்றது. "உங்கள் உள்ளங்கள் குடிவெறி, களியாட்டத்தாலும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாதவாறும் அந்நாள் திடீரென வந்து ஒரு



கண்ணியைப்போல் உங்களைச் சிக்க வைக்காதவாறும் எச்சரிக்கையாய் இருங்கள்'' (லூக் 21:34). ''அனைத்தையும் சீர்தூக்கிப்பாருங்கள். நல்லதைப் பற்றிக்கொள்ளுங்கள். எல்லா வகையான தீமைகளையும் விட்டு விலகுங்கள்" (1தெச 5:21-22). எனவே சமூக ஊடகங்களை சீர்தூக்கி பார்த்து பயன்படுத்துவோம். சமூக வலைதளங்களில் வரும் நச்சு கருத்துக்களை களைந்திடுவோம். திருப்பாடல் ஆசிரியர் கூறுவது போல இழிவான எதையும் கண்முன் வைப்பதை தவிர்ப்போம்; "இழிவான எதையும் என் கண்முன் வைக்கமாட்டேன். நெறிதவறியவரின் செயலை நான் வெறுக்கின்றேன்; அது என்னைப் பற்றிக்கொள்ளாது" (திபா 101:3). எது நல்லது எது உகந்தது என தேர்ந்து தெளிவோம். "இந்த உலகத்தின் போக்கின்படி ஒழுகாதீர்கள். மாறாக, உங்கள் உள்ளம் புதுப்பிக்கப் பெற்று மாற்றம் அடைவதாக! அப்போது கடவுளின் திருவுளம் எது எனத் தேர்ந்து தெளிவீர்கள். எது நல்லது, எது உகந்தது, எது நிறைவானது என்பதும் உங்களுக்குத் தெளிவாகத் தெரியும்'' (உரோ 12:2). சரியான ஊடக நோன்பு மீட்பரும் மெசியாவுமாகிய இயேசுவின் பிறப்பை கொண்டாட நம்மை பக்குவப்படுத்தும்.

கிறிஸ்து பிறப்பு பஜனை பாடல்கள், குடில்கள் அமைப்பது, வாழ்த்துக்கள் பகிர்வது, பரிசுகள் வழங்குவது, நற்செயல்கள் செய்வது இவையாவும் நம்மை கொண்டாட்ட மனநிலைக்கு கொண்டு செல்கின்றன. ஆனால் கொண்டாட்டத்தின் மையம் மனுவுருவான கிறிஸ்துவாக இருக்க வேண்டும். இயேசுவின் பிறப்பு நிகழ்வுகள் எளிமை என்னும் புண்ணியத்தை பறைசாற்றுகின்றன. 'ஏழையரின் உள்ளத்தோடு இருப்பது தான் கிறிஸ்தவனின் அடையாள அட்டை' என்கிறார் திருத்தந்தை பிரான்சிஸ். இயேசுவின் பிறப்பில் அடங்கியிருக்கும் தெய்வீகமும் ஏழ்மையும் எடுத்து இயம்பப்பட வேண்டும். மெசியாவின் பிறப்பு என்கிற மகத்தான நிகழ்வு நம்முடைய மனங்களில் பதிவு செய்யப்பட வேண்டும். யூத குலத்தை மட்டுமல்ல

உலக மக்கள் அனைவரையும் இயேசுவின் மீட்பு இலக்காக கொண்டுள்ளது. ஞானிகளின் வருகை இதை எடுத்துச் சொல்கிறது; இயேசுவை சந்தித்த ஞானிகள் புது பாதையில் பயணித்தது போல குடிலில் பிறந்த குழந்தையை சந்தித்து புது பாதையில் பயணிக்க ஆயத்தமாவோம். தெய்வீகத்தை குறிக்கும் சாம்பிராணியையும், அரசத்துவத்தை குறிக்கும் பொன்னையும், மனிதத்தை குறிக்கும் வெள்ளைப் போளத்தையும் பரிசாக கொடுத்து நெடுஞ்சான் கிடையாய் விழுந்து இயேசுவை வணங்கிய ஞானிகளை போல் இந்த கால கட்டத்தில் நோன்பாலும், தவத்தாலும், மனதுருகிய ஜெபத்தாலும், இரக்கம் கலந்த இரக்க செயல்களாலும் குழந்தை இயேசுவுக்கு காணிக்கையை தயார் செய்வோம்.

இறைவார்த்தை ஆண்டு திருச்சபை நமக்கு தந்திருக்கும் அருளின் ஆண்டு. இந்த ஆண்டைய கிறிஸ்து பிறப்பு விழாவிற்கு ஆயத்தமாகும் இத்தருணத்தில் இறைவார்த்தையை தியான வாசிப்பு செய்வதிலும் வாழ்வாக்குவதிலும் தனி கவனம் செலுத்துவோம். பிறர் நலன் கருதிய நன்மைகள் செய்து மகிழ்ச்சியை பகிர்வோம். இறைவார்த்தை தியான வாசிப்பை தனிப்பட்ட முறையிலும், குடும்பமாகவும், குழுமமாகவும், அருள்வாழ்வியங்களாகவும், இயக்கங்களாகவும் நடத்த அறிவுறுத்துகிறேன். எந்த பணியை தொடங்கினாலும் இறைவார்த்தையை நெஞ்சில் இருத்தி தொடங்குவோம். பிள்ளைகளுக்கு பெயர் சூட்டும் போது விவிலியம் சார்ந்த பெயர்களை சூட்டுவதற்கு முயற்சி எடுப்போம். இயேசுவின் குழந்தை பருவ நிகழ்வுகளை மீண்டும் மீண்டும் தியான வாசிப்பு செய்து நெஞ்சுக்கு நெருக்கமாக வைப்போம்.

அன்பானவர்களே இந்த நோன்பின் மத்தியில் நமது மறைமாவட்டத்தின் உதய நாளை (டிசம்பர் 16) கொண்டாடுகிறோம். மறைமாவட்டம் என்பது கடவுளின் அன்பையும், பிறரன்பையும் வெளிப்படுத்தும் அமைப்பு. நமது மறைமாவட்ட உதய நாளில்



நன்றியும் வேண்டுதலும் கலந்த மனநிலையோடு ஜெபத்தில் மூழ்கியிருக்க அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன். **டிசம்பர் மாதம் 16-ம் நாள் காலை 10.00 மணிக்கு ஆயர் இல்லத்தில் வைத்து குருக்களுக்கான மாதாந்திர தியானமும், ஒரு மணி நேர நற்கருணை ஆராதனையும், கிறிஸ்துப்பிறப்பு கூடுகையும் நடைபெறும்.** அன்று மாலை ஒவ்வொரு பங்குகளிலும், துறவற இல்லங்களிலும் 1 மணி நேர நற்கருணை ஆராதனை நடத்தி ஆண்டவருக்கு நன்றி சொல்லி வேண்டும்படி அன்புடன் அறிவுறுத்துகிறேன். கடவுள் தந்த அருள்வரங்களை நினைத்து நன்றி சொல்வோம். நல்லுள்ளம் கொண்ட உபகாரிகளை நன்றியுடன் நினைப்போம். மேலும் ஒவ்வொரு பங்கின் வளர்ச்சி பணிகளுக்காக மன்றாடுவது போல மறைமாவட்ட பொது தேவைகளுக்காகவும் மன்றாடுவோம். பேராலய கட்டுமானம், மேய்ப்புப்பணி நிலைய கட்டுமானம், புது மறைத்தூதுப்பணி தளங்கள் அமைத்தல், மந்தாரம்புத்தூரில் அமைய இருக்கும் Mercy Home கட்டுமான பணிகள் போன்றவற்றிற்காகவும், போதைக்கு அடிமையானவர்கள் மனம் மாறி அவர்களில் நம்பிக்கை மறுமலர்ச்சி ஏற்பட்டு இயேசுவை சந்தித்த ஞானிகள் புது பாதையில் பயணித்தது போல பயணிக்க இறைவனை வேண்டுவோம். இந்த அருளின் நேரத்தில் இறையாசீர் உங்களோடு தங்கட்டும். அனைவருக்கும் அறிவிப்பு காலத்தின் ஆசீரை பகிர்ந்து கொள்வதோடு, கிறிஸ்து பிறப்பு மற்றும் புத்தாண்டு வாழ்த்துக்களை இதயத்தின் ஆழத்திலிருந்து அன்புடன் தெரிவித்து கொள்கிறேன்.

இறையாசீர் உங்களோடு தங்குவதாக.

***அன்புடன்,***

+Vincent Paulos

**† மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ்**
மார்த்தாண்டம் மறைமாவட்டம்

# இளங்குருமடச் செய்திகள்

- ❖ இளங்குருமட அருட்சகோதரர்களுக்கான முதல் பருவம் நிறைவு பெற்று விடுமுறை வழங்கப்பட்டது. நவம்பர் முதல் வாரம் இளங்குருமட சகோதரர்களுக்கான விளையாட்டு போட்டிகள் St. Mary's CBSE School மைதானத்தில் வைத்து நடைபெற்றது. அருட்சகோதரர்கள் ஆர்வத்துடன் பங்கேற்று பரிசுகளும் பெற்றனர்.
- ❖ இளங்குருமட சகோதரர்கள் 06,11,2024 முதல் 10.11.2024 வரை 5 நாட்கள் சிறப்பு முகாம் புனித ஜார்ஜியார் ஆலயம் ஜார்ஜ் நகரில் வைத்து நடைபெற்றது. சகோதரர்கள் வீடுகளை சந்தித்து மக்களுடன் உரையாடல்கள் நடத்தி புது அனுபவங்கள் பெற்றுகொண்டனர்.

# நற்செய்தி சங்க செய்திகள்

✶ கொல்லங்கோடு மற்றும் களியக்காவிளை மறைவட்ட நற்செய்தி சங்க வகுப்பானது நவம்பர் மாதம் 9 -ம் தியதி குழித்துறை தாபோர் இல்லத்தில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை ரதீஷ் ரிச்சார்ட் மற்றும் அருட்சகோதரி நீத்தா கிரேஸ் அவர்களால் வகுப்புகள் நடத்தப்பட்டது. மதியம் இறைவார்த்தையின் தியான வாசிப்பு (Lexio Divina) நடத்தப்பட்டு இறுதியில் பாவ சங்கீர்த்தனத்துடன் நிறைவு பெற்றது



# SISTERS OF CHARITY OF ST. JEANNE ANTIDE THOURET

"ஆண்டவரை எனது உள்ளம் போற்றி பெருமைப்படுத்துகின்றது. என் மீட்பராம் கடவுளை நினைத்து எனது மனம் பேருவகை கொள்கின்றது."

சிஸ்டேஸ் ஆப் சாரிட்டி (Sisters of Charity of St. Jeanne Antide Thouret) துறவற சமூகம் இந்தியாவில் இறைப்பணி செய்ய காலடி எடுத்து வைத்து 25 ஆண்டுகள் நிறைவு செய்வதை கொண்டாடும் வெள்ளிவிழா கொண்டாட்டம் நவம்பர் 13-ம் தேதி நடைக்காவு யூனிட்டி ஹோமில் வைத்து நடைபெற்றது. இவ்விழாவிற்கு மார்த்தாண்டம் மறைமாவட்ட மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் அவர்கள் தலைமை தாங்கினார்கள். அன்றைய தினம் மாலை 4.30 மணிக்கு ஆடம்பர திருப்பலி ஆயர் தலைமையில் நடைபெற்றது. இதில் பெருந்திரளான குருக்களும், துறவிகளும், பொதுநிலையினரும் கலந்து கொண்டனர். இருபத்தைந்து ஆண்டுகள் இறைவன் எம்சமூகத்தை சீரும் சிறப்புமாக வழிநடத்தியதை நினைத்து நன்றி கூறுகின்றோம். குறிப்பாக மார்த்தாண்டம் மறைமாவட்டத்தில் பணிவிடை புரிய அழைப்பு விடுத்து, எம்மை வழிநடத்திய மேதகு ஆயர் யூஹானோன் மார் கிறிஸோஸ்டோம் அவர்களுக்கும் ஓராயிரம் நன்றிகள். தொடக்க காலத்தில் எம் சமூகம் இம்மண்ணில் வேரூன்ற பல கஷ்டங்கள் கடந்து இறையாட்சியை பரப்ப கடினமாக உழைத்த எம் அருட்சகோதரி மரிய ரீத்தா அவர்கள் என்றும் நினைவில் நிலைத்திருப்பவர். அருட்சகோதரி பெராலி, அருட்சகோதரி மிலாடி இவர்களின் பணிகளும் என்றும் மறக்க முடியாதவை. எம் சகோதரிகள் இந்தியாவில் பணிவிடை புரிய வந்தபோது, மொழி, கலாச்சாரம் என்ற எல்லாமே புதிதாக தென்பட்டபோது, அவர்களை வரவேற்று தங்குவதற்கு இடம் கொடுத்து, பராமரித்த எம் Daughters of Mary கன்னியர்கள் துறவற சமூகத்தை நன்றியுடன் நினைவில் கொள்கின்றோம்.

# மேரி மக்கள் துறவற சபை

மேரி மக்கள் துறவற சபையின் ஆப்பிரிக்காவின் முதல் துறவற இல்லம் புனித சூசையப்பர் மாகாணத்தின் சார்பாக ஆப்பிரிக்காவில் தான்சானியாவில் நிறுவப்பட்டது. தான்சானியாவின் உள்ள தான்சானியா கத்தோலிக்க உயர் மறைமாவட்டத்தின் துணை ஆயர் Rt. Rev. Wilbroad Kibozi அவர்கள் 20.11.2024 அன்று துறவற இல்லத்தை ஆசீர்வதித்து, நற்கருணையை நிறுவினார். இந்த ஆசீர்வாத நிகழ்வில் மறைமாவட்ட குருக்கள், பல்வேறு துறவற இல்ல குருக்கள், துறவிகள் மற்றும் Mbuyuni பங்கு மக்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர். புனித ஜோசப் மாகாண தலைவி ரோஸ் பிரான்சிஸ் மற்றும் உதவி மாகாண தலைவி சோஃபி தெரேஸ், ஆலோசனை குழு உறுப்பினரான அருள் சகோதரி ராணி சேவியர் ஆகியோர் கலந்து கொண்டார். இங்கு 4 சகோதரிகள் சேவை செய்கிறார்கள். அருட்சகோதரி பிரசாந்தி பிரான்சிஸ், அருட்சகோதரி இவாஞ்சலின் பிரான்சிஸ், அருட்சகோதரி சுனிதா தெரேஸ், அருட்சகோதரி செராபின் மரியா ஆகியோர் தங்கி மறைபரப்புப்பணி மற்றும் கல்விப் பணியை செய்து வருகின்றனர்.

## திருமண ஆயத்தப்பயிற்சி

**டிசம்பர்** மாத திருமண ஆயத்தப்பயிற்சி வகுப்புகள் 13, 14 ஆகிய நாட்களில் **குழித்துறை மேய்ப்புப் பணி நிலையத்தில்** வைத்து நடைபெறுகிறது.



# மார்த்தாண்டம் மறைமாவட்ட சமூக சேவை மையம் (மிட்ஸ்)

**கோல்பிங் தினவிழா**

கோல்பிங் இந்தியா சார்பாக அடோல்ப் கோல்பிங் அவர்களுக்கு அருளாளர் பட்டம் கொடுக்கப்பட்டதனை சிறப்பிக்கும் வகையில் ஆண்டுதோறும் அக்டோபர் மாதம் 27-ம் நாள் கோல்பிங் தினமாக கொண்டாடப்படுகின்றது. இந்த ஆண்டிற்கான கோல்பிங் தின கொண்டாட்டமானது 26.10.2024 சனிக்கிழமை அன்று காலை 10 மணிக்கு மிட்ஸ் அரங்கில் வைத்து நடத்தப்பட்டது. விழா துவக்கமாக நற்கருணை ஆராதனை அருட்தந்தை ஆன்றோ ஜெபின் அவர்களால் நடத்தப்பட்டது. பின்னர் ஆயர் அவர்கள் தலைமையில் கோல்பிங் தின பொதுக்கூட்டம் நடத்தப்பட்டது. அதில் செயற்குழு உறுப்பினர் முனைவர் ஏசுராஜ் அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். மார்த்தாண்டம் மறைமாவட்டகோல்பிங் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் அறிமுக உரையாற்றினார்கள். தொடர்ந்து மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகை அவர்கள் கோல்பிங் குடும்ப தத்துவத்தின் அடிப்படையில் உத்தம கிறிஸ்தவ வாழ்க்கையில் நல்ல மனிதனின் குணங்களை குறித்தும் நாம் எப்போதும் கிட்டப்பார்வை உடையவராக இல்லாமல், தூரப்பார்வை உடையவராக விளங்க வேண்டும் என்றும் கூறினார்கள். மேலும் இத்திட்டத்தின் மூலம் மக்கள் பல்வேறு வளர்ச்சி நிலைகளை அடைந்து குடும்பங்களில் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து வாழவேண்டும் என்றும் சிறப்புரையாற்றினார். அதனை தொடர்ந்து செயற்குழு உறுப்பினர் திரு. பால்ராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். கூட்டமைப்பு சார்பில் கோல்பிங் குடும்ப

உறுப்பினர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றது. பின்னர் சிறப்பான முறையில் செயல்பட்ட கோல்பிங் குடும்ப பொறுப்பாளர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டு இறுதி ஜெபத்துடன் மதியம் 1 மணிக்கு விழாவானது இனிதே நிறைவு பெற்றது. இவ்விழாவில் மொத்தம் 107 கோல்பிங் குடும்பங்களிலிருந்து 436 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## சமூக பாதுகாப்பு தினம்

மிட்ஸ் உறுப்பினர் பாதுகாப்பு திட்டத்தின் சார்பாக 23.10.2024 அன்று காலை 10.30 மணிக்கு மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து சமூக பாதுகாப்புதின விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அடிகளார் தலைமையில் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் காப்பீட்டின் முக்கியத்துவம் மற்றும் காப்பீடு சமூகத்தில் உள்ள அடித்தட்டு மக்களுக்கும் கிடைக்க நாம் முயற்சி மேற்கொள்ள வேண்டும் என்று மிட்ஸ் இயக்குநர் அவர்கள் தமது தலைமையுரையில் கூறினார்கள். சிறப்பு விருந்தினர்களான எல்.ஐ.சி குலசேகரம் கிளை மேலாளர் திருமதி. ராஜேஸ்வரி மற்றும் தக்கலை கிளை எல்.ஐ.சி வளர்ச்சி அலுவலர் திரு ஜாண் செல்வராஜ் ஆகியோர் தங்கள் கருத்துரையில் காப்பீடு என்பது அனைவருக்கும் தேவை என்றும், பல்வேறு வகையான காப்பீட்டு திட்டங்கள் மற்றும் பென்சன் திட்டங்கள் குறித்தும் கூறியதுடன், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள் பயன்படும் வகையில் துவங்கப்பட இருக்கின்ற புதிய பாலிசி விரைவில் செயல்படுத்தப்படும் என்றும் கூறினார்கள். இந்திய மக்கள் தொகையில் மொத்த விழுக்காட்டில் சில விழுக்காடு மக்களே காப்பீடு செய்துள்ளதாகவும், மிட்ஸ் நிறுவனத்தின் சுயஉதவிக் குழு மற்றும் கோல்பிங் உறுப்பினர்கள் அனைவரும் தற்போது மிட்ஸ் உறுப்பினர்



பாதுகாப்பு திட்டத்தில் இணைந்துள்ளனர் என்றும் மிட்ஸ் திட்ட அலுவலர் திரு. ஷாஜன் ஜோசப் அவர்கள் கூறினார்கள். தொடர்ந்து MMWS திட்டத்தின் Core team உறுப்பினர்கள் மற்றும் முகவர்கள் அனைவருக்கும் ஊக்கப்பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் இத்திட்டத்திலிருந்து இறைவனடி சேர்ந்த 6 நபர்களின் வாரிசுக்கு இறப்பு நிவாரணத்தொகையாக ரூ.10,000/- க்கான காசோலையயும், இறந்த நபரின் நினைவாக ஒரு மாமரக்கன்றும் வாரிசு தாரர்களுக்கு வழங்கப்பட்டது. இவ்வருடம் 2024 இத்திட்டத்திலிருந்து இறப்பின் வழியாக பிரிந்துசென்ற 23 நபர்களுக்கு ஒரு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. இறுதியாக தேசிய கீதத்துடன் கூட்டமானது நிறைவுற்றது.

## தளிர்கள் உலகம் – குழந்தைகள் தினவிழா

தளிர்கள் உலக பயனாளிகளுக்கான குழந்தைகள் தினவிழா 09.11.2024 அன்று மிட்ஸ் கலைஅரங்கில் வைத்து நடத்தப்பட்டது. மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை முனைவர் ஜெறோம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கன்னியாகுமரி மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அதிகாரி திருமதி ஷகீலா பானு அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்கள். விழாவில் மிட்ஸ் இயக்குநர் அருட்தந்தை ஜெறோம் அவர்கள் தலைமையுரையாற்றி குழந்தைகளை வாழ்த்தினார்கள். மாணவி ஆஸ்லின் ஜெர்சி குழந்தைகள் தின செய்தி வழங்கினார்கள். சிறப்பு விருந்தினர் அவர்கள் குழந்தைகளுக்கான பாதுகாப்பு திட்டங்கள், சட்டங்கள், தண்டனைகள் மற்றும் குழந்தைகள் சமூகத்தில் எப்படி வாழவேண்டும் என்றும் தனக்கு தீங்கு விளைவிப்பவர்களிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று தமது சிறப்புரையில் விளக்கமளித்தார்கள். தொடர்ந்து 10-ம் வகுப்பில் 400-க்குமேல் மதிப்பெண் பெற்ற மாணவ

மாணவிகளுக்கு கேடயங்கள் வழங்கப்பட்டன. அதனை தொடர்ந்து மாணவர்களுக்கு 'நாங்கள் நாளைய தலைவர்கள்'; என்ற தலைப்பில் அருட்தந்தை பபியான்ஸ் அவர்களாலும், மாணவர்களின் பெற்றோருக்கு 'ஆளுமை நிறைபெற்றோர்' என்னும் தலைப்பில் பேராசிரியர் திருமதி பரிமளா செல்வி அவர்களாலும் ஒருமணி நேர கருத்தரங்கு நடத்தப்பட்டன. பின்னர் மதிய உணவுடன் விழாவானது நிறைவு பெற்றது. இவ்விழாவில் 276 மாணவ மாணவிகளும் 170 பெற்றோர்களும் என மொத்தம் 446 பேர் கலந்துகொண்டனர்.

**உதவித்திட்டங்கள்**

1. 24.10.2024 அன்று 12 கோல்பிங் குடும்பங்களுக்கு சிறுதொழில் செய்வதற்காக ஒரு குடும்பத்திற்கு ரூபாய்1,00,000/- வீதம் 12,00,000/- ரூபாயும் சிறப்பு வருமானம் ஈட்டும் திட்டம் வழியாக நபருக்கு ரூபாய் 40,000/- வீதம் 7 நபர்களுக்கு 2,80,000/- ரூபாயும் வழங்கப்பட்டது.

2. 20.11.2024 அன்று மார்த்தாண்டம் பணிமண்டலத்தின் 14 சுய உதவி குழுக்களில் உள்ள 56 சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு விருட்சம் கடன் உதவி திட்டத்தின் வழியாக ரூபாய் 28,00,000/- கடனாக வழங்கப்பட்டது.

3. 30.10.2024 அன்று கோல்பிங் குடும்ப உறுப்பினர்கள் 30 பேருக்கு பசு வளர்ப்பதற்காக நபருக்கு ரூபாய் 15,000/- வீதம் 4,50,000/- கடன் உதவி வழங்கப்பட்டது.

4. 04.11.2024 அன்று கோல்பிங் குடும்ப உறுப்பினர்கள் 10 பேருக்கு வீடு கட்டும் திட்டத்தின் கீழ் நபருக்கு ரூபாய் 50,000/- வீதம் 5,00,000 ரூபாயும், கழிவறை கட்ட 25 நபர்களுக்கு நபருக்கு 15,000/- வீதம் 3,75,000/- ரூபாயும், 2 மாணவர்களுக்கு கல்வி கடனாக ஒரு மாணவனுக்கு ரூபாய் 15,000/- வீதம் 30,000/- ரூபாயும் வழங்கப்பட்டது.



**பிறநிகழ்வுகள்**

1. 17.10.2024 அன்று பிலாங்காலை ஆலய வளாகத்தில் வைத்து மிட்ஸ் மற்றும் Sri Ram Fondation இணைந்து நடத்திய இலவச புற்றுநோய் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. இந்த முகாமில் 25 நபர்கள் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

2. 24.10.2024 அன்று கோயம்புத்தூர் KKID-ல் வைத்து **வைத்து** Community Engagement Skills for field Staff என்ற தலைப்பில் இரண்டு நாட்கள் நடைபெற்ற பயிற்சியில் மிட்ஸ் பணியாளர்கள் மூன்று பேர் கலந்துகொண்டனர்.

3. 27.10.2024 அன்று மதியம் 2.30 மணி முதல் 3.30 மணிவரை மிட்ஸ் அலுவலகம், ஆற்றூர், பெருவிளை மற்றும் மரியகிரி ஆகிய பகுதிகளில் வைத்து மிட்ஸ் அறிவு திறன் தேர்வு நடத்தப்பட்டது. இந்த தேர்வினை தளிர்கள் உலகம் திட்ட பயனாளிகள் 144 பேர் எழுதினர்.

4. 28.10.2024 மற்றும் 29.10.2024 ஆகிய இரண்டு தினங்கள் தொலையாவட்டம் புதுவசந்தம் போதைநோய் நலப்பணியகத்தில் வைத்து நடைபெற்ற 'போதை நோயிலிருந்து நலம்பெறுவதற்கான உளநல முறைகள்' குறித்த பயிற்சியில் மிட்ஸ் பணியாளர்கள் ஏழு பேர் கலந்துகொண்டனர்.

5. 15.11.2024 அன்று மிட்ஸ் அலுவலகத்தில் வைத்து கோல்பிங் சார்பில் 'ஆரோக்கியமான உணவு' என்னும் தலைப்பில் விழிப்புணர்வு கருத்தரங்கு நடத்தப்பட்டது. இக்கருத்தரங்கினை டாக்டர் ஜீனா ஜோஸ்பின் அவர்கள் நடத்தினார்கள். பயனுள்ள வகையில் அமைந்த இந்த கருத்தரங்கில் கோல்பிங் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் மிட்ஸ் பணியாளர்கள் கலந்துகொண்டனர்.

# MCYM
*Youth Apostolate*

## மார்த்தாண்டம் மறைமாவட்ட இளையோர் தின கொண்டாட்டம்

மார்த்தாண்டம் மறைமாவட்ட இளையோர் இயக்க தினவிழா ZIARAH2k24 ஆனது 03.11.2024 அன்று புனித விண்ணேற்பு அன்னை ஆலயம் மரியாகிரியில் வைத்து நடைபெற்றது.

மதியம் 1.30 மணியளவில் மலங்கரை கத்தோலிக்க கல்லூரியிலிருந்து பேரணி ஆரம்பித்து மரியகிரி ஆலயத்தில் சென்றடைந்து. அங்கு வைத்து மார்த்தாண்டம் மறைமாவட்ட ஆயர் மேதகு Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் மற்றும் அருட்தந்தை Dr. பிரதீப் வாழத்தறைமலையில் (NA BET & SQA) அவர்கள் சிறப்பான முறையில் வரவேற்கப்பட்டனர். MCYM கொடியானது MCYM Sister Animator Sr. பிளவர் ஜோண் DM அவர்கள் ஏற்றினார். MCYM உறுதிமொழி அனைவரும் இணைந்து கூறப்பட்டு, MCYM கீதம் பாடப்பட்டது. சமாதானத்தின் அடையாளமாக புறா பறக்க விடப்பட்டது.

பொதுக்கூட்டமானது மதியம் 2.30 மணியளவில் ஆரம்பமானது. இறைவணக்கம் சூரியகோடு அலகால் பாடப்பட்டது. அபிஷா மோள் திருவிவிலியம் வாசித்தார். அபிஷேக் MCYM ஜெபித்தார். MCYM Lay Animator திரு. றாஸ்டின் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். MCYM ஆண்டறிக்கை MCYM செயலர் அருணா சேவியரால் வாசிப்பட்டது. சிறப்பு விருந்தினர் அருட்தந்தை Dr. பிரதீப் வாழத்தறைமலையில் அவர்கள் இளைஞர்களுக்கு சிறந்ததொரு வகுப்பு எடுத்தார். நமது ஆயர் Dr. வின்சென்ட் மார் பவுலோஸ் அனைவரையும் வாழ்த்தி கூறினார். தலைவர் உரை MCYM தலைவர் ஆஷ்பின் றிச்சார்ட் அவர்கள் கூறினார். மார்த்தாண்ட மாகாண தலைவி Sr. றோஸ் பிரான்சிஸ் DM வாழ்த்துரை கூறினார். 10 மற்றும் 12 வகுப்பு பொதுத்தேர்வில் சிறந்த மதிப்பெண் பெற்றவர்கள் மற்றும்



University Rank Holder ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். எழுத்துப் போட்டிகளுக்கான பரிசு வழங்கப்பட்டது. ஓராண்டு ஆண்டு திட்டம் Word of God குறித்து இளையோர் இயக்க இயக்குநர் அருட்தந்தை ஜெஸ்டின் எடுத்துரைத்தார். ஒவ்வொரு மறைவட்டத்திலிருந்தும் கலைநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. Lay Animator திருமதி ஜாஸ்மின் அனைவருக்கும் நன்றி கூறினார்கள்.

## அழகியமண்டபம் மறைவட்ட இளையோர் தின கொண்டாட்டம்

மறைவட்ட MCYM தினமானது 27.10.2024 அன்று ஆழ்வார்கோயில் அலகில் வைத்து சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியின் துவக்கத்தில் MCYM கொடியானது ஏற்றப்பட்டு, MCYM கீதம் பாடி MCYM உறுதிமொழி சொல்லப்பட்டது. அழகியமண்டபம் மறைவட்ட முதன்மை குரு அருட்தந்தை சிபி, அழகியமண்டபம் MCYM Director அருட்தந்தை அனுப் OIC, Sister Animator, Sr. பிரான்சிலெட் DM மற்றும் சிறப்பு விருந்தினர்களாக அருட்தந்தை அருள்ஷைஜூ, அருட்தந்தை வில்பின் விஜூ ஆகியோர் கலந்துக்கொண்டனர். நிகழ்ச்சியின் ஒரு பகுதியாக குத்துவிளக்கானது ஏற்றப்பட்டது. அதன் பின் இறைவணக்கப் பாடல் ஆழ்வார்கோயில் பங்கு இளையோர்களால் பாடப்பட்டது. அதன்பின் மறைவட்ட MCYM தலைவர் செல்வன் அபீஷ் அவர்களால் வரவேற்புரை கூறப்பட்டது. பின் மறைவட்ட MCYM -யின் ஓராண்டு அறிக்கை மறைவட்ட MCYM செயலர் செல்வி ரேஷ்மா அவர்களால் வாசிக்கப்பட்டது. அதன்பின் அனைத்து அலகு MCYM அறிக்கைகளும் அந்தந்த அலகு செயலர்களால் வாசிக்கப்பட்டது. தொடர்ந்து அருட்தந்தை சிபி அவர்கள் சிறப்புரை வழங்கி இளைஞர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார்கள். தொடர்ந்து, அருட்தந்தை அருள்ஷைஜூ அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்கள். பின் தலைவர் உரை MCYM Director அருட்தந்தை அனுப் OIC அவர்களால் வழங்கப்பட்டது. அதன்பின் Sister Animator Sr. பிரான்சிலெட் அவர்கள் புனித அசிசியை பற்றியும் இளைஞர்கள் குறித்தும் பேசினார்கள்.

தொடர்ந்து கலைநிகழ்ச்சிகள் ஆரம்பமானது. இதில் செல்லங்கோணம், பூந்தோப்பு, பிலாங்காலை, சேனவிளை, காட்டுவிளை ஆகிய அலகுகளை சார்ந்த இளையோர்கள் சிறப்பாக பங்குப்பெற்றனர். அதன்பின் பரிசுகள் வழங்கப்பட்டது. அதில் மறைவட்டம் சார்பில் நடத்தப்பட்ட எழுத்துப்போட்டிகளில் (Ivano - 2K24) வெற்றிபெற்ற இளையோர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது. அதன்பின் நன்றியுரை செல்வன் அபிஷேக் அவர்களால் கூறப்பட்டது. இறுதியில் கூட்டமானது மாலை 4.30 மணியளவில் பாப்பரசர் கீதத்துடன் இனிதே முடிவடைந்தது.

## நாகர்கோவில் மறைவட்ட இளையோர் தின கொண்டாட்டம்

நாகர்கோவில் மறைவட்ட MCYM இளையோர் இயக்க தினம் 27.10.2024 அன்று கன்னியாகுமரி பங்கில் வைத்து நடைபெற்றது. அனைத்து MCYM இளையோர்களும் ஆர்வமுடன் பங்கேற்றனர். அன்றய தினம் அனைத்து நிகழ்வுகளும் சிறப்பாக நடந்தது. முதலில் மறைமாவட்ட MCYM Animator Sr. பிளவர் ஜோண் அவர்களால் கொடியே ஏற்றி சிறப்பாக தொடங்கப்பட்டது. அருட்தந்தை அஜீஷ் ஜோகன் மற்றும் Sr. மார்ட்டின் மரியா சிறப்பாக வழிநடத்தினார்கள். Dr. ஜீனா ஜோஸ்பின் அவர்கள் தங்கள் வாழ்க்கை அனுபவங்களே பகிர்ந்து கிறிஸ்துவோடு எப்படி ஒன்றிணைத்து வாழ வேண்டும் என்று அவர்கள் சிறப்பாக கூறினார்கள். பின்பு கலைநிகழ்ச்சி ஆரம்பமானது. அறிக்கையானது வாசிக்கப்பட்டது. அருட்தந்தை ஜாண் குமார் அவர்கள் MCYM குறித்து கூறினார். பின்னர் மறைமாவட்ட MCYM தலைவர் திரு. ஆஷ்பின் ரிச்சார்ட் அவர்கள் MCYM - எவ்வாறு சிறப்பாக வழிநடத்தலாம் என்று கூறினார்கள். பின்னர் MCYM தலைவர் திரு. அனீஷ் ராஜா சிறப்புரை கூற Sr. மார்டின் மரியா அவர்கள் நன்றி கூற சிறப்பாக முடிவடைந்தது. பின்னர் அனைவரும் கன்னியாகுமரி கடற்கரைக்கு சென்றுவிட்டு மகிழ்ச்சியாக வீடு திரும்பினோம்.



நாகர்கோவில் MCYM இளையோர்கள் அனைவரும் இணைந்து நற்கருணை ஆராதனை சிறப்பாக குமாரபுரம் பங்கில் வைத்து நடைபெற்றது. அருட்தந்தை அஜீஷ் ஜோகன் மற்றும் Sr. மார்டின் மரியா சிறப்பாக வழிநடத்தினார்கள். நற்கருணை ஆராதனையில் ஒவ்வொரு பங்குகளில் இருந்து வேண்டுதல் ஜெபம் மற்றும் நன்றி ஜெபம் கூறப்பட்டது. Sr. மார்டின் மரியா “கடவுள் நமக்கு யார்” என்பதே சிறப்பாக கூறினார் அருட்தந்தை அஜீஷ் ஜோகன் இறுதியுரை வழங்கினார். பின்பு அனைவரும் குமாரபுரம் இல்லத்தில் அனைத்து மக்களையும் சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி எங்களால் முடிந்த உதவிகளை அவர்களுக்கு செய்தோம்.

# MCA
## Diocese of Marthandam

- நவம்பர் மாதம் 17-ம் தேதி அன்று மறைமாவட்ட MCA மேலாண்மை குழு உறுப்பினர் திருமதி மரிய செல்வி அவர்கள் தச்சூர்கோணம் புனித மரியன்னை தேவாலய MCA அலகை பார்வையிட்டு வழிகாட்டுதல்களை வழங்கினார். புதிய பொறுப்பாளர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். அனைவரும் இணைந்து சிறப்பாக செயல்பட ஆலோசனை வழங்கினார்கள்.
- மார்த்தாண்டம் மறைமாவட்ட MCA சார்பாக நவம்பர் மாதத்தில் பனச்சமூடு மறைவட்ட அலகுகள் சந்திக்கப்பட்டு செயல்பாடுகளை ஊக்குவிக்க திட்டமிடப்பட்டது. அதன்படி 10.11.2014 அன்று கருமானூர், வெள்ளச்சிப்பாறை, ஜார்ஜ்நகர் மற்றும் தச்சூர்கோணம் பங்குகளும் 17.10.2024 அன்று பனச்சடு, புலியூர்சாலை, வெட்டுக்குழி மற்றும் குளப்பறை பங்குகள் சந்திக்கப்பட்டு புதிய நிர்வாகிகளும் தேர்வு செய்யப்பட்டனர்.

# பெயர்விழா நல்வாழ்த்துக்கள்



அருட்தந்தை
**அனிஷ்**
**டிசம்பர் 03**



அருட்தந்தை
**மரிய அற்புதம்**
**டிசம்பர் 08**



அருட்தந்தை
**மரியதாசன்**
**டிசம்பர் 08**



அருட்தந்தை **ஏசுதாஸ்**
**டிசம்பர் 25**



அருட்தந்தை **பார்பெல்லோ கிறிஸ்டஸ்**
**டிசம்பர் 25**



அருட்தந்தை **வினு இம்மானுவேல்**
**டிசம்பர் 25**



அருட்தந்தை **ஜாண். எஸ்**
**டிசம்பர் 27**



அருட்தந்தை
**அருள்தாஸ்**
**டிசம்பர் 27**



அருட்தந்தை
**அருள்ஷைஜு**
**டிசம்பர் 27**



அருட்தந்தை
**ஜெபின் ஜாண்**
**டிசம்பர் 27**



## மலங்கரை கத்தோலிக்க சிறார் இயக்கம் (MCCL)

மார்த்தாண்டம் மறைமாவட்ட MCCL செயற்குழு கூடுகையானது 17.11.2024 அன்று குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெற்றது. அதில் இந்த வருட MCCL போட்டி மற்றும் ஆண்டுவிழா பற்றி சிந்திக்கப்பட்டது. மறைவட்டங்களில் போட்டிகள் 2025 ஜனவரி 5-க்கு முன்னதாக நடத்தி முதல் மற்றும் இரண்டாம் பரிசு பெறுகின்ற பங்குகளின் பெயர்பட்டியல் ஒப்படைக்க கூறப்பட்டது. மறைமாவட்ட அளவில் MCCL போட்டியானது 2025 ஜனவரி 26-ம் தேதி பிற்பகல் 1.30 மணிக்கும், மறைமாவட்ட MCCL ஆண்டுவிழாவானது 2025 ஜனவரி 26-ம் தேதி பிற்பகல் 3.00 மணிக்கு மேதகு ஆயர் அவர்களின் தலைமையில் குழித்துறை தாபோர் தியான இல்லத்தில் வைத்து நடைபெறும் என்று தீர்மானிக்கப்பட்டது.

### MCCL களியக்காவிளை மறைவட்டம்

களியக்காவிளை மறைவட்ட MCCL ஒயிலாட்ட போட்டியானது 17.11.2024 அன்று மலங்கரை கத்தோலிக்க கல்லூரி, மரியகிரியில் வைத்து நடைபெற்றது. களியக்காவிளை மறைவட்ட MCCL இயக்குனர் அருட்தந்தை சில்ஜின் அவர்கள் எல்லா ஒழுங்குகளையும் செய்தார். போட்டியில் கோயிக்கல்தோப்பு ஆலயம் முதலிடத்தையும், மரியகிரி ஆலயம் இரண்டாமிடத்தையும் பெற்றனர். மறைவட்ட முதன்மைகுரு அருட்தந்தை அருள்தாஸ் அவர்கள் வெற்றிபெற்ற பிள்ளைகளுக்கு பரிசுகள் வழங்கினார்.

# HEALTH FOR ONE MILLION (HOM)
## Diocese of Marthandam

உலக நீரழிவு நோய் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு 14.11.2024 அன்று மார்த்தாண்டம் மறைமாவட்ட மருத்துவ சேவை இயக்கமான HOM மற்றும் Diocese Health Association (DHA), சார்பாக உம்மன்கோடு எம்மாவூஸ் பெண்கள் மனநல காப்பகத்தில் வைத்து நீரழிவு நோய் குறித்த விழிப்புணர்வு கருத்துரையும் நீரழிவு நோய் பரிசோதனையும் நடைபெற்றது. HOM இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் அறிமுக உரையாற்றி துவக்கி வைத்தார்கள். HOM பணியாளர் லிஸ்பின் வரவேற்புரையாற்றினார்கள். DHA செயலர் அருட்சகோதரி லின்ஸி தோமஸ், பனச்சமூடு புனித சூசையப்பர் மருத்துவமனை மருத்துவர் றியா, ஆய்வக பணியாளர் அருட்சகோதரி ஏஞ்சல் ஆகியோர் எம்மாவூஸில் சிகிட்சை பெற்றுவரும் பெண்களுக்கு விழிப்புணர்வு மற்றும் நீரழிவு நோய் பரிசோதனையும் செய்தார்கள். எம்மாவூஸ் பெண்கள் மனநல காப்பக தலைவர் அருட்சகோதரி அஞ்சனா மற்றும் HOM Palliative செவிலியர்கள் அருட்சகோதரி ஜஸ்வர்யா, திருமதி ஷீபா மற்றும் திருமதி ஆஷா ஆகியோர் இம்முகாமிற்கான ஏற்பாடுகளை செய்தனர்.



மார்த்தாண்டம் மறைமாவட்ட மருத்துவ சேவை இயக்கமான HOM தலைமையில் தமிழ்நாடு ஆயர் பேரவை நலவாழ்வு பணிக்குழு மற்றும் DHA சார்பாக 20.11.2024 அன்று உண்ணாமலைக்கடை மலங்கரை கத்தோலிக்க ஆலயத்தில் வைத்து மார்த்தாண்டம் அலகின் சுய உதவிக் குழு பொருளர்களுக்கு உலக கழிவறை தினம் குறித்த விழ்ப்புணர்வு கருத்துரை நடைபெற்றது. HOM பணியாளர் லிஸ்பின் கருத்துரையாற்றினார். மார்த்ரண்டம் அலகின் அமைப்பாளர் திருமதி லதா அவர்கள் அனைவரையும் வரவேற்றார்கள். இந்நிகழ்வில் சுமார் 20 பொருளர்கள் கலந்து கொண்டனர்.

மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் கீழ் இயங்கும் மார்த்தாண்டம் மெடிக்கல் மிஷன் சார்பாக பேதுருவின் கரங்கள் என்னும் மாதாந்திர மருத்துவ உதவித் திட்டம் செயல்பட்டு வருகிறது. நவம்பர் மாதம் 40 நிரந்தர நோயாளிகளுக்கு 1,000/- ரூபாய் வீதம் வழங்கப்படடது. ஆகஸ்ட் மாதத்திற்குரிய உதவித்தொகை 20.11.2024 அன்று HOM அலுவலக வளாகத்தில் வைத்து; வழங்கப்பட்டது.

## HOM - SPECIAL SCHOOL FOR THE MENTALLY RETARDED

குழித்துறை HOM அறிவுசார் குறைபாடுடையோருக்கான சிறப்புப்பள்ளி, மார்த்தாண்டம் மெடிக்கல் மிஷன் மற்றும் முஞ்சிறை ATSVS சித்த மருத்துவ கல்லூரி மருத்துவமனை சார்பாக 25.11.2024 அன்று குழித்துறை மார் எப்ரேம் வளாகத்தில் வைத்து HOM சிறப்புப்பள்ளி குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கான சித்த மருத்துவ விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. HOM சிறப்புப்பள்ளி தலைமையாசிரியர் திரு டென்னிஸ் வரவேற்புரையாற்றினார். HOM சிறப்புப்பள்ளி இயக்குநர் அருட்தந்தை அஜீஷ் குமார் அவர்கள் அறிமுகவுரையாற்றி மருத்துவ முகாமை துவக்கி வைத்தார்கள். இம்முகாமில் சர்க்கரை நோய் மற்றும் இரத்த அழுத்த பரிசோதனை செய்யப்பட்டு தேவைப்படும் நோயாளிகளுக்கு மருந்துகளும் ஆலோசனைகளும் வழங்கப்பட்டது. இம்முகாமில் 75 பேர் கலந்துகொண்டனர். ATSVS மருத்துவக் கல்லூரி மருத்துவர்கள் கார்த்திக் மற்றும் Aasha ஆகியோர் சிகிட்சை அளித்தனர். பயிற்சி மருத்துவர்கள் உடனிருந்து உதவி செய்தனர். இம்முகாமிற்கான ஏற்பாடுகளை HOM சிறப்புப்பள்ளி பணியாளர்கள் மற்றும் ஆசிரியர்கள் செய்தனர்.



## சந்திப்பும் மகிழ்ச்சியும்....

சென்னை, ஸ்ரீ அருணோதயம் டிரஸ்ட் ன் நிறுவனர் / செயலர் திரு. ஐயப்பன் சுப்பிரமணியன் அவர்கள் 19.11.2024 செவ்வாய்க்கிழமை அன்று HOM சிறப்புப்பள்ளியை பார்வையிட வருகை தந்தார்கள். சிறப்புக் குழந்தைகள் பூங்கொத்து வழங்கி வரவேற்றார்கள். தொடர்ந்து இயக்குநர் / தாளாளர் அருட்தந்தை. அஜீஷ் குமார் அவர்களும் தலைமையாசிரியர் திரு. டென்னிஸ் அவர்களும் வருகை தந்திருந்த திரு. ஐயப்பன் அவர்களுடன் இணைந்து கொல்லஞ்சியில் புதிதாக அமைய இருக்கும் சிறப்புப்பள்ளியின் இடத்தை பார்வையிட்டார்கள். தொடர்ந்து இயக்குநர் அலுவலகத்தில் வைத்து கட்டிட வரைபட கலந்தாய்வு திட்டமிடல் கூட்டம் நடைபெற்றது. கொல்லஞ்சியில் உள்ள 72 சென்ட் நிலத்தில் சிறப்பாக வசதிகளுடன் கட்டிடம் அமைக்கப்பட சுமார் 3 மணி நேரம் கலந்தாய்வுக்கூட்டம் நடைபெற்றது. திரு. ஐயப்பன் அவர்கள் தனது பல்வேறு அனுபவங்களை எருத்துக்கூறி கட்டிட வரைபடத்தில் திருத்தங்களை மேற்கொள்ள அறிவுறுத்தினார். பின்னர் சுமார் 3 மணியளவில் மேதகு ஆயருடன் சந்திப்பு நடைபெற்றது. சிறப்புப்பள்ளிக்கு சிறப்பம்சங்களுடன் கூடிய பள்ளி வாகனம் கிடைக்க திரு. ஐயப்பன் அவர்கள் பரிந்துரை செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மார் எப்ரேம் பொறியியல் கல்லூரி இலவுவிளை

இலவுவிளை மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் 'Mar Symphony' என்ற கிறிஸ்துமஸ் பாடல் போட்டிகள் 23.11.2004 அன்று நடைபெற்றது. இப்போட்டிகள் தாளாளர் தந்தை அருட்தந்தை சதீஷ் குமார் அவர்களால் கல்லூரி முதல்வர் Dr. லெனின் பிரட் அவர்களின் முன்னிலையில் காலை 10.00 மணியளவில் துவங்கப்பட்டது. இப்போட்டிகள் மூன்று பிரிவுகளின் கீழ் நடைப்பெற்றது. பிரிவு I கல்லூரி மற்றும் தனியார் பாடகர் குழுவாகவும், பிரிவு II தேவாலய பாடகர் குழுவாகவும், பிரிவு III பள்ளிகள் பாடகர் குழுவாகவும் நடைப்பெற்றது. இதில் மொத்தம் 36 பாடகர் குழுக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் மற்றும் கோப்பைகள் வழங்கப்பட்டன. இந்த மாபெரும் சிறிஸ்துமஸ் பாடல் போட்டிகளை கல்லூரியின் பேராசிரியர் திருமதி அன்பு ஹாமினி அவர்கள் ஒருகிணைத்தார்கள்.

அண்ணா பல்கலைக்கழக மண்டல அளவிலாக நடந்த 33 கல்லூரிகள் பங்கேற்று விளையாட்டு போட்டிகளில் இலவுவிளை மார் எப்ரேம் கல்லூரி மாணவ மாணவிகளும் பாங்கேற்றனர். முதுகலை வணிக மேலாண்மை மாணவி டிஸ்யூஷா பிரின்ஸ் கராத்தே போட்டியில் பங்கேற்று பல்கலைக்கழக அணிக்கு தேர்வு செய்யப் பட்டுள்ளனர். மேலும் கொக்கோ போட்டியில் ஆண்கள் அணி முதலிடமும், பூப்பந்தாட்ட போட்டியில் மகளிரணி முதலிடத்தையும் பிடித்து தங்கப்பதக்கம் பெற்று மாநில அணிக்கு தேர்வு செய்யப் பட்டுள்ளனர். டென்னிஸ் மற்றும் கூடைப்பந்தாட்ட போட்டியில் வெண்கல பதக்கம் பெற்றுள்ளனர். வெற்றிபெற்று சாதனைப் படைத்த மாணவ மாணவியரையும் அனைவரும் பாராட்டினர்.



மார் எப்ரேம் பொறியியல் கல்லூரியில் கிறிஸ்து பிறப்பு விழாவானது 22.11.2024 அன்று பிற்பகல் 3.00 மணியளவில் மிக கோலாகலமாக ஆரம்பமானது. கல்லூரி மாணவிகள் வரவேற்பு நடனமாடி அனைவரையும் வரவேற்றனர். கிறிஸ்து பிறப்பு குறித்த நற்செய்தி பகுதியை மாணவி ஜெமிமா அவர்கள் வாசித்தார்கள். கல்லூரியின் நிதிகாப்பாளர் அருட்தந்தை கெபின் அவர்கள் அறிமுக உரை ஆற்றினார். கல்லூரி முதல்வர் Prof. Dr. A. லெனின் பிரட் அவர்கள் இனிய கிறிஸ்மஸ் பாடல்பாடி அரங்கத்தை மகிழ்வித்தார்.

கல்லூரியின் முதல்வரும், மார்த்தாண்டம் மறைமாவட்டத்தின் ஆயருமான மேதகு வின்சென்ட் மார் பவுலோஸ் கிறிஸ்து பிறப்பின் உண்மைத் தன்மையானது ஆன்மாவால் எளிமையாக இருக்க வேண்டும் என்பதை மையக்கருத்தாகக் கொண்டு பேசினார். நிகழ்வின் சிறப்பு விருந்தினர் அருட்சகோதரி பிரேமா குரியன் அவர்கள் கிறிஸ்து பிறப்பு சிறப்புரை ஆற்றினார்கள். கிறிஸ்து பிறப்பு கொண்டாட்டத்தை ஒட்டி பலவிதமான போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது. உதவிபேராசிரியர் திருமதி டயனா அவர்கள் நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்கள்.

# மறைவட்ட செய்திகள்

## மார்த்தாண்டம் மறைவட்டம்

**குருக்களின் தியானம்**

மார்த்தாண்டம் மறைவட்ட குருக்களுக்கான மாதாந்திர தியானமானது விமலபுரம் பங்கில் வைத்து நவம்பர் மாதம் 12-ஆம் தேதி நடைபெற்றது. தியானத்தில் மறை வட்டத்தை சார்ந்த அனைத்து குருக்களும் தவறாமல் கலந்து கொண்டனர். மாதாந்திர தியானத்தை அருட்தந்தை. பெர்னார்ட் அவர்கள் வழி நடத்தினார்கள்.

## அழகியமண்டபம் மறைவட்டம்

**இறைவார்த்தை ஆண்டு துவக்க விழா :**

அழகிய மண்டபம் மறைவட்ட இறைவார்த்தை ஆண்டு தொடக்க விழாவானது நவம்பர் 3-ம் தேதி பிலாங்காலை பங்கில் வைத்து நடைபெற்றது. மார்த்தாண்டம் மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை மோண் ஜோஸ் பிறைட் அடிகளார் அதனை துவங்கி வைத்து உரையாற்றினார். மறைமாவட்ட விவிலிய ஆண்டு இயக்குனர் அருட்தந்தை ஆன்றோ ஜெபின் அவர்களும் வருகை தந்தார். 200-க்கும் மேற்பட்ட இறைமக்கள் பங்கு கொண்டனர். 50-க்கும் மேற்பட்ட குழந்தைகள் விவிலிய மாந்தர்களாக வந்திருந்தனர்.

## களியக்காவிளை மறைவட்டம்

**கிறிஸ்து அரசர் பெருவிழா**

களியக்காவினை, கொல்லங்கோடு மறைவட்ட இறைமக்கள் ஒன்றிணைந்து ஆண்டுதோறும் சிறப்பித்துவரும் கிறிஸ்து அரசர் பெருவிழாவானது இவ்வாண்டு 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை மேதகு ஆயர் வின்சென்ட் மார் பவுலோஸ் ஆண்டகையின் தலைமையில் ஆதிச்சவிளாகம், புனித யூதா ததேயு ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இவ்விழாவின் முக்கிய நிகழ்வான கிறிஸ்து அரசர் பெருவிழா திருப்பவனி பிற்பகல் 2.30 மணிக்கு மங்காடு, புனித



ஜார்ஜியார் தேவாலயத்திலிருந்து ஆரம்பமாகி ஆதிச்சவிளாகம், புனித யூதா ததேயு ஆலயத்தில் நிறைவடைந்தது. தொடர்ந்து மேதகு ஆயரின் தலைமையில் நற்கருணை ஆசீரும், பொதுக்கூட்டமும், கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்வுகளும் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு கொல்லங்கோடு மற்றும் களியக்காவிளை மறை வட்டத்தை சார்ந்த ஏராளமான இறைமக்கள் கலந்து கொண்டு இறையாசீர் பெற்று சென்றனர்.

## பனச்சமூடு மறைவட்டம்

மலங்களை கத்தோலிக்க இயக்கம் MCA

மார்த்தாண்டம் மறைமாவட்ட மலங்கரை சத்தோலிக்க இயக்கத்தின் மேலாண்மைக்குழு நிர்வாகிகள் மற்றும் பொறுப்பாளர்கள் இயக்குநர் தந்தை அர்னால்டு டயஸ் அவர்களது தலைமையில் பனச்சமூடு மறைவட்ட மேலான்மைக்குழு மற்றும் பங்குகளில் புதிதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளை பார்வையிடவும், ஆய்வு செய்யவும் அறிவுரைகள் வழங்கவும் 24.11.2024 அன்று பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்ற மறைவட்ட கூட்டத்தில் பங்கேற்றனர்.

மேற்படி ஒருங்கிணைந்த கூட்டம் பனச்சமூடு புனித சூசையப்பர் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. மறைவட்ட தலைவர் திரு. கிறிஸ்துதாஸ் அனைவரையும் வரவேற்றார். மறைவட்ட முதன்மைகுரு கோர் எப்பிஸ்கோப்பா S.வற்கீஸ் அவர்கள் துவக்கவுரை நிகழ்த்தினார். மறைமாவட்ட இயக்குனர் அருட்தந்தை டயஸ் அவர்கள் கருத்துரையும், வாழ்த்துரையும் வழங்கினார். மறைமாவட்ட தலைவர் திரு. எட்வர்ட் ஜாண் அவர்கள் அறிமுக உரை நிகழ்த்தினார். மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை தோமஸ் சிஜோ OIC அவர்கள் செயல்பாடுகளை விளக்கி பேசினார். மறைவட்ட அளவில் நடைபெற்ற வணக்கத்திற்குரிய மார் ஈவானியோஸ் ஆண்டகையின் வாழ்க்கை குறித்து நடைபெற்ற கட்டுரை போட்டியில் முதல் மூன்று இடங்களை பெற்ற நபர்களுக்கு

பரிசுத்தொகையும், கலந்துகொண்ட அனைவருக்கும் நினைவுப்பரிசும் அருட்தந்தையர்களால் வழங்கப்பட்டது. மறைமாவட்ட மேலாண்மை குழு உறுப்பினர் திரு. வர்க்கீஸ் அனைவருக்கு நன்றியை கூறினார். பின்னர் மறைவட்ட மேலாண்மை குழு தேர்தல் நடைபெற்றது. அதில் கீழ் கண்ட நபர்களை தேர்வு செய்யப்பட்டது.

1. தலைவர் - திரு. Y. வர்க்கீஸ், பனச்சமூடு
2. துணைத்தலைவர் - 1. திரு. R. ஷாஜி, கருமானூர்
   2. திருமதி சுனிதா தச்சூர்கோணம்
3. செயலர் - திரு. இராஜகுமார், வெட்டிக்குழி
4. இணைசெயலர் - திருமதி கிரிஜா, குளப்பாறை
5. பொருளர் - திருமதி அன்னம்மா. வெள்ளச்சிப்பாறை
6. செயற்குழு உறுப்பினர்கள் :
   1. திரு. சுதீப் உண்ணி- காஞ்சியோடு
   2. திரு. அனீஷ் - கீழ்மாங்கோடு
   3. திருமதி. ஷீஜா - புலியூர்சாலை
7. மேலாண்மை குழு உறுப்பினர்கள்
   1. திரு. R. றாபி - தச்சூர்கோணம்
   2. திரு. ஜெயராஜ் - புலியூர்சாலை
   3. திரு. இராஜகுமார் - பனச்சமூடு
   4. திரு. ஜாண் பெர்னாட்ஸ் - காஞ்சியோடு
   5. திரு. கிறிஸ்துதாஸ் - ஜார்ஜ் நகர்
   6. திருமதி ராஜகுமாரி - வெள்ளச்சிப்பாறை

புதிதாக தலைவராக தேர்வு செய்யப்பட்ட திரு. Y. வர்க்கீஸ் அவர்கள் முன்னாள் நிர்வாகிகளுக்கு நன்றியும், புதிதாக தேர்வு செய்யப்பட்ட நிர்வாகிகளுக்கு வாழ்த்தும் தெரிவித்தார். மறைமாவட்ட செயலர் திரு. K.C. பிறைட் மற்றும் மறைவட்டம் பொறுப்பாளர்களின் ஒத்துழைப்புடன் மறைமாவட்டத்திலிருந்து 15 நபர்களும் மறைவட்ட ஆலயங்களின் பொறுப்பாளர்கள் 60 நபர்களும் என 75 பேர் கலந்து



கொண்டது சிறப்பாக இருந்தது. இயக்குனர் தந்தை தோமஸ் சிஜோ OIC அவர்கள் அனைவருக்கும் ஆசியுரை வழங்கி நிறைவு செய்தார்கள்.

## நாகர்கோவில் மறைவட்டம்

***ஏவன்கேலியோன் க்விஸ் 2024 - 2025***

இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு, நாகர்கோவில் மறைவட்டத்தில், இறைவார்தை ஆண்டின் மறைவட்ட ஒருங்கிணைப்பாளர் அருட்தந்தை ரெதீஷ் ரிச்சர்ட் அவர்களுடைய தலைமையில், விவிலியத்தை முழுமையாக வாசித்து கற்கும் நோக்கத்துடன், ஒரு வினாடி வினா போட்டியானது, நிகழ்நிலையில் (online) ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு நாளும் இரண்டு அதிகாரங்கள் வீதம் வினாக்கள் கேட்கப்பட்டும். மறைவட்டத்திலிருந்து ஏராளமான இறை மக்கள், இதில் பங்கெடுத்து வருகின்றனர். இறைவார்த்தையை தொடர்ந்து வாசிக்கவும், அதில் ஆழமாக மூழ்கி அர்த்தங்களை அறியவும், உற்சாக உணர்வோடு இறைவார்த்தையை அனுதினம் கரங்களில் ஏந்தவும் இந்த வினாடி வினா போட்டி காரணமாக அமைகின்றது.

இறைவார்த்தை ஆண்டை முன்னிட்டு நாகர்கோவில் மறைவட்டத்தில் 24.11.2024 ஞாயிற்றுக்கிழமை, மதியம் 2:00 மணிக்கு பெருவிளை புனித தேவசகாயம் திருத்தலத்தில் வைத்து, வின்சென்ட் தே பவுல் சங்கத்தின் கூடுகையை இரு பகுதியாக பிரித்து முதல் ஒரு மணி நேரம் இறைவார்த்தை தியான வாசிப்பு அருட்தந்தை ரெதீஷ் ரிச்சார்ட் அவர்களால் பயிற்சி வழங்கப்பட்டது. இதில் நாகர்கோவில் மறைவட்ட முதன்மை குருவும், வின்சென்ட் தே பவுல் சங்கத்தின் மறைவட்ட ஆன்மீக ஆலோசகருமான பேரருட்தந்தை ஜாண்குமார் அவர்கள் தலைமை வகித்தார்கள். இதில் மறைவட்ட அருட்தந்தையர்களான அருட்தந்தை ராபர்ட், அருட்தந்தை அபின்சன் ஆகியோர் பங்கேற்றார்கள்.

# ஆயரின் நவம்பர் மாத நிகழ்வுகள்



2 ➢ மறைமாவட்ட Finance Council கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

3 ➢ மரியகிரியில் வைத்து நடைபெற்ற MCYM தின விழாவில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார்.

3 ➢ ஊரம்புவிளை ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

4-6 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியல் (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.

7 ➢ புனித சேவியர் பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெற்ற தமிழ்நாடு தொழிலாளர் பணிக்குழுவின் பொதுக்குழு கூட்டத்திற்கு தலைமை தாங்கினார்.



11-12 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியல் (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.

12 ➢ காதோலிக்கேட் மையத்தில் வைத்து நடைபெற்ற திருத் தொண்டர்களுக்கான பயிர்ச்சியல் வகுப்பெடுத்தார்.

13 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியல் (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.

14 ➢ கன்னியாகுமரி மறைமாவட்ட CSI திருச்சபை நடத்திய திருமண நிகழ்வு ஆராதனையில் மறையுரை ஆற்றினார்கள்.

14 ➢ நடைக்காவு, Sisters of Charity (SOC) துறவற இல்ல வெள்ளிவிழா நிறைவை ஒட்டி திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

17 ➢ நடைக்காவு ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.

18-19 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியல் (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.

20 ➢ ஆயர் இல்லத்தில் வைத்து நடைபெற்ற மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலர்கள் கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

21 ➢ MJKM பள்ளிக்கூட ஆண்டுவிழாவில் தலைமை தாங்கி தலைவர் உரையாற்றினார்.

21 ➢ பாலவிளை CBSC பள்ளிக்கூட ஆண்டுவிழாவில் தலைமை தாங்கி உரையாற்றினார்.

22 ➢ மார் எப்றேம் பொறியியல் கல்லூரியில் நடைபெற்ற கிறிஸ்து பிறப்பு கூடுகைக்கு தலைமை தாங்கினார்.

24 ➢ சாரூர் ஆலயத்தில் புதிதாக கட்டப்பட்ட சமூக நலக் கூடத்தை அர்ச்சித்து திறந்து வைத்தார்.

25 ➢ மார்த்தாண்டம் கிறிஸ்து அரசர் பேராலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி புதுநன்மை வழங்கி இறையாசீர் பொழிந்தார்.

25 ➢ கொல்லங்கோடு மற்றும் களியக்காவிளை மறைவட்டங்கள் இணைந்து நடத்திய கிறிஸ்து அரசர் பெருவிழா கூடுகைக்கு தலைமை தாங்கி தலைவர் உரை ஆற்றினார்.

26 ➢ சூரியகோடு பள்ளிக்கூடத்தில் நடைபெற்ற விளையாட்டு விழா போட்டியினை துவங்கி வைத்து உறையாற்றினார்.

27 ➢ மரியகிரி CBSC பள்ளிக்கூட ஆண்டுவிழாவில் தலைமை தாங்கி தலைவர் உரை ஆற்றினார்.

30 ➢ திருவனந்தபுரம் புனித மரியன்னை உயர் குருத்துவ பயிற்சியகத்தின் இறையியல் மாணவர்களுக்கு தூய ஆவியியல் மற்றும் அருளியல் (Pneumatology and Grace) பற்றி வகுப்பு எடுத்தார்.

30 ➢ விமலபுரம் ஆலயத்தில் திருவிழா திருப்பலி நிறைவேற்றி இறையாசீர் பொழிந்தார்.




## இம்மாதம் நினைவு கூர

டிசம்பர் 2024

1 – தூய இறை அன்னை எலிசபெத்துடன் சந்திப்பு
இருபத்தைந்து நோன்பு ஆரம்பம்


3


3 – புனித பிரான்சிஸ் சவேரியார்
4 – தமஸ்கு நகரத்து மார் யோவான்
5 – மார் சாபாஸ், அலெக்ஸாந்திரியகாரராகிய மார் கிளீமிஸ்
6 – அந்தியோக்கியக்காரராகிய மார் தியோபிலோஸ்


8


7 – புனித அம்புறோஸ்
8 – புனித திருமுழுக்கு யோவானின் பிறப்பு
புனித கன்னிமரியாவின் அமலோற்பவத் திருநாள்
10 – மார் பஹனானும் சகோதரி சாறாளும் 40 இரத்தசாட்சிகளும்


8

14 – புனித சிலுவை யோவான்
புனித ஆபிரகாம் கிதுனோயோ
15 – புனித யோசேப்புக்குக் கிடைத்த காட்சி
16 – மார்த்தாண்டம் மறைமாவட்டம் உதயமான நாள் (1996)


25

17 – மார் இரபுலா
18 – மயிலாப்பூர் அற்புத சிலுவை
22 – யல்தாவுக்கு முன்னைய ஞாயிறு
விவிலிய ஞாயிறு


26

25 – யல்தா திருநாள் (கிறிஸ்துமஸ்)
26 – தூய இறையன்னையின் புகழ்ச்சி
27 – குழந்தைகள் கொலையுண்ட தினம்
28 – அரசரும் இறைவாக்கினருமான தாவீது
29 – யல்தாவுக்குப்பின் முதல் ஞாயிறு



## மார்த்தாண்டம் மறைமாவட்ட இளையோர் தினவிழா



## அழகியமண்டபம் மறைமாவட்ட இறைவார்த்தை ஆண்டு துவக்கவிழா



## MCCL



## Mar Ephraem College



## நற்செய்தி சங்கம்



## Sisters of Charity - Silver Jubilee



## HOM School



## MCA



## நாகர்கோவில் மறைவட்ட இளையோர் தினம்



## அழகியமண்டபம் மறைமாவட்ட இளையோர் தினம்



## வின்சென்ட் டி போள் கூடுகை நாகர்கோவில் மறைவட்ம்



## DM Convent



## MIDS



## HOM

